<u>தமிழ்நாடு அரசு</u>

<u>நெடுஞ்சாலைத் துறை</u>

<u>தேசீய நெடுஞ்சாலை வட்டம் திருநெல்வேலி</u>

<u>ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு</u>

<u>ஒ.அ.எண்.2/2005–2006.இவ.அ–2/நாள்: 18.4.2005.</u>

தமிழக ஆளுநர் அவர்களுக்காகவும் அவர்களது சார்பிலும் கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட சதவீத ஒப்பந்தப் புள்ளிகள் இத்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, கண்காணிப்புப் பொறியாளர் (தே,நெ) வட்டம், கதவு எண்.ஏ 50, 3வது மெயின் ரோடு, மகாராஜா நகர், திருநெல்வேலி 11 அவர்களால் அன்னாரது அலுவலகத்தில் வேலை நாட்களில் 13.5.2005 அன்று 3.00 மணி (அலுவலகக் கடிகாரப்படி) வரை பெற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் அதாவது 13.5.2005 அன்று பிற்பகல் 3.15 மணியளவில் (அலுவலகக் கடிகாரப்படி) கண்காணிப்பு பொறியாளர் (தே,நெ) திருநெல்வேலி–11 அவர்களால் வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற ஏஜென்டுகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வ.எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் லட்சத்தில்) | முன் வைப்புத் தொகை | ஒப்பந்தப் புள்ளிகள் கிடைக்கும் இடம் | ஒப்பந்தக்காரரின் பண வரம்பு | ஒப்பந்தப் புள்ளி நமூனா விலை விற்பனை வரியுடன் |
|---|---|---|---|---|---|---|
| 1. | தே,நெ.எண். 45பி கி.மீ. 262/0–264/0 வரை சுனாமியால் பாதிக்கப்பட்டசாலையில் சீரமைப்பு பணிகள் | 60.71 | 41.000 | கோட்டப் பொறியாளர் (தே.நெ) தூத்துக்குடி | முதல் வகுப்பு மாநில அளவில் | 5,000<br>630.00<br>--------<br>5,630.00 |

மேற்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி நமூனா நிபந்தனைகள் அடங்கிய பட்டியல்களை கோட்டப் பொறியாளர் (தே,நெ) தூத்துக்குடி அவர்களிடம் கீழே குறிப்பிட்டுள்ள தொகையை அதற்கு எதிரே குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பில் செலுத்தி (திருப்பித் தரமாட்டாது) அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் 10.5.2005 முடிய எழுத்து மூலம் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் ஒப்பந்த பதிவு நடப்பு நிதி ஆண்டு 2005–2006 வரை செல்லக் கூடியதாக உள்ளது என்ற சான்றிதழ் கொடுத்த பின்பே ஒப்பந்தப் புள்ளி படிவங்கள் கொடுக்கப்படும்.

| | |
|---|---|
| 1) ஒப்பந்த நமூனாவின் விலை<br>ரூ. 5,000/– | கணக்குத் தலைப்பு<br>"8658 Highways Suspense III OR to the credit of the Divisional Engineer (NH) Thoothukudi |
| 2) விற்பனைவரி மற்றும் சர்சார்ஜ்<br>ரூ. 630/– | 0040 – Sales Tax |

நெடுஞ்சாலைத் துறையில் முதல் வகுப்பு (மாநில அளவில்) பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி நமூனா வழங்கப்படும். சுமலும் சொந்தமாக மைய

சுடுகலவை இயந்திரம் மற்றும் எலக்ட்ரானிக் சென்சார் பேவர் வைத்து இருக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கே ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் வழங்கப்படும்.

13.5.2005 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு பின்னர் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அவ்வாறு தாமதமாக பெறப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படாமல் சம்பந்தப்பட்டவர்களுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

<u>குறிப்பு:</u>

1. ஒப்பந்த நமூனாக்கள் விண்ணப்பத்தின் பேரில் ஒப்பந்தக்காரர்களுக்கு கோட்டப் பொறியாளர் (தே,நெ) தூத்துக்குடி அவர்களால் தபால் மற்றும் கூரியர் தபால் அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது நமூனாவின் விலை மற்றும் தேவையான தபால் செலவுத் தொகையினை ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் பொறுப்பில் தான் அனுப்பி வைக்க வேண்டும். அவர்களது பொறுப்பில் அனுப்பப்படும். நமூனா கிடைப்பதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால் அதற்கு இத்துறை பொறுப்பேற்காது. பேக்ஸ் மற்றும் இ.மெயில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படமாட்டாது.

2. ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தக்காரர்களால் மற்றும் அவர்களின் அனுமதிக்கப்பட்ட ஏஜெண்டுகளால் நேரடியாகவோ, பதிவுத் தபாலிலோ அல்லது கூரியர் மூலமாகவே 13.5.2005 பிற்பகல் 3.00 மணிக்குள் கண்காணிப்புப் பொறியாளர் (தே.நெ. திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பட வேண்டும். அஞ்சல் துறையினால் ஏற்படும் காலதாமத்திற்கு இத்துறை எந்த விதத்திலும் பொறுப்பேற்காது.

3. ஏதாவது காரணத்தை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான இறுதி நாள் விடுமுறை தினமாக கண்காணிப்புப் பொறியாளர் (தே,நெ) திருநெல்வேலி அவர்களால் அடுத்த நாள் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள அதே நேரத்தில் திறக்கப்படும்.

4. ஒப்பந்தக்காரர்கள் தொடர்ந்து இரண்டு வருடங்களாக ஒப்பந்தங்களில் கலந்து கொள்ளாமல் இருந்தாலோ அல்லது மூன்று அறை ஒப்பந்தப்படிவங்கள் பெற்று ஒப்பந்தங்களில் கலந்து கொள்ளாமல் இருந்தாலே அவர்களது ஒப்பந்தப்பதிவு காலாவதியாகிவிடும்.

5. ஒப்பந்தக்காரர்கள் மேற்கூறிய வேலைகளில் உள்ள B.M. மற்றும் S.D.B.C ஆகிய இனங்களின் மொத்த அளவில் 40% (நாற்பது சதவீதம்) அளவை ஏதாவது ஒரே அரசு வேலையில் (Single Work) கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏதாவது ஒரு வருடத்தில் செய்து முடித்து இருக்க வேண்டும். B.M.480 cum, S.D.B.C 240 cum. மேற்க்கண்ட நிபந்தனையை பூர்த்தி செய்யாதவர்களின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

(Sd.) 18/4/05

கண்காணிப்புப் பொறியாளர்
தே.நெ) திருநெல்வேலி.